திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பயிர்க் கடன் வழங்கக் கோரிக்கை**

First Published : 20 Sep 2010 12:39:53 PM IST

புதுக்கோட்டை, செப். 19: மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் கூட்டுறவு சங்கங்களில் பயிர்க்கடன் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

புதுக்கோட்டையில் அண்மையில் நடைபெற்ற அச்சங்கத்தின் மாவட்டக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு, சங்கத்தின் மாவட்டத் தலைவர் எம். செபஸ்தியான் தலைமை வகித்தார். நிர்வாகிகள் எஸ். பொன்னுச்சாமி, ஏ. அண்ணாசாமி, வி. துரைச்சந்திரன், டி. சத்தியமூர்த்தி, கே. ராஜாத்தி, எம். வீரப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நெல், மிளகாய் விவசாயிகளுக்கு வர்ஷா பீமா மழை காப்பீடு திட்டம்**

First Published : 20 Sep 2010 12:10:31 PM IST

சிவகங்கை, செப்.19: நெல், மிளகாய் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பீட்டை ஈடுகட்ட வர்ஷா பீமா மழை காப்பீடு திட்டம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என காப்பீட்டு நிறுவன மண்டல மேலாளர் சி.அன்பரசு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் தெரிவித்திருப்பது: மத்திய அரசால் நிறுவப்பட்டுள்ள அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட் விவசாயிகளின் நலனுக்காக மழை காப்பீடு திட்டத்தினை தமிழ்நாட்டில் சிவகங்கை, ராமநாதபுரம், நாகை, தஞ்சாவூர், திருவாரூர், திருவண்ணாமலை, மதுரை, புதுக்கோட்டை, கடலூர் ஆகிய மாவட்டங்களில், 2010 சம்பா நெல் மற்றும் மிளகாய் பயிருக்கு அமல்படுத்துகின்றது.

இத்திட்டம், பருவகால மழையின் மாற்றங்களை அனுசரித்து, விவசாயிகளின் குறைவான விளைச்சல் இழப்பீட்டினை காப்பீடு மூலம் ஈடு செய்யும். அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட், மத்திய அரசால் 20-1-2002- ம் ஆண்டு வேளாண் காப்பீட்டுத் திட்டங்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்டது.

இதுவரை இந்நிறுவனம் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு | 1,124 கோடி தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் இழப்பீடு அளித்துள்ளது. 2009-ல் நெற்பயிருக்கு சுமார் 6500 விவசாயிகளுக்கு | 2.5 கோடி இத்திட்டத்தின் மூலம் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகையானது பயிர் செய்யும் செலவீனத்தை பொருத்து ஏக்கருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் காப்பீடு செய்துள்ள விவசாயிகளும் நஷ்டஈடு காப்பீடு பெறும் தகுதி உடையவராவர். காப்பீடுக் காலம் முடிவடைந்த சில நாள்களுக்குள், காசோலையாகவோ அல்லது விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்கவோ ஏற்பாடு செய்யப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் காப்பீடு நிறுவனத்தின் முகவர் மூலம் வரையோலையாக (ஈஈ) பிரிமீயம் செலுத்தலாம். ரொக்கமாக பிரிமீயத்தினை எந்த நபரிடமும் செலுத்தினால் கம்பெனி பொறுப்பேற்காது.

இத்திட்டத்தில் சேர விவசாயிகள், தங்களது பெயரிலேயே சேமிப்பு வங்கிக் கணக்கு வைத்திருப்பது அவசியம். பிரிமீயத் தொகையை வரைவோலை மூலம் அனுப்ப வேண்டிய முகவரி ஈஈ ஐசஊஅயஎமத ஞஊ அஐஇ ஞஊ ஐசஈஐஅ கபஈ அலஐந ஆஅசஓ அஇ. சஞ. 00601020001827 (ல்ஹஹ்ஹக்ஷப்ங் ஹற் இட்ங்ய்ய்ஹண்).

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் சேவைவரி 10.30 உள்பட ரூபாய் ஒரு ஏக்கருக்கு. எஸ்.புதூர் வட்டாரம் நெல்லுக்கு 585, மிளகாய்க்கு | 717. திருப்பத்தூர், கன்னங்குடி, தேவகோட்டை, சாக்கோட்டை ஆகிய வட்டாரம் நெல்லுக்கு |441. சிங்கம்புணரி வட்டாரம் நெல்லுக்கு | 640. சிவகங்கை வட்டாரம் நெல்லுக்கு |518. திருப்புவனம் வட்டாரம் நெல்லுக்கு | 474, மிளகாய்க்கு | 882. காளையார்கோவில், கல்லல் ஆகிய வட்டாரம் நெல்லுக்கு | 540, மிளகாய்க்கு | 772. மானாமதுரை வட்டாரம் நெல்லுக்கு | 485. இளையான்குடி வட்டாரம் நெல்லுக்கு |441, மிளகாய்க்கு | 662. மொத்த காப்பீடு மதிப்பு ஒரு ஏக்கர் நெல்லுக்கு | 6,000, மிளகாய்க்கு |10,000. விவசாயிகள் பிரிமீயம் கட்ட கடைசி நாள் 25-9-2010.

தினமலர்

**சொட்டுநீர் பாசன கடன் வழங்க ரூ.7 கோடி இலக்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,00:53 IST

கடலூர் : விவசாயிகளுக்கு நெல், கரும்பு, வாழை, காய்கறி, பழங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்ய சொட்டு நீர் பாசன கடனுக்கு 50 சதவீதம் வரை வேளாண்துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது.
தொடக்க வேளாண்மை கூட் டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன கடன் வழங்க 2010-11ம் ஆண்டிற்கு 7 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு நெல், கரும்பு, வாழை, காய்கறி, பழங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றை சாகுபடி செய்ய சொட்டு நீர் பாசன கடன் 50 சதவீதம் வரை வேளாண்துறை மூலம் மானியம் வழங்கப்படும். இக் கடனை பெற விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகி பயன் பெறலாம்.

குறிஞ்சிப்பாடி, வில்வராயநத் தம், சேராக்குப்பம், அங்குசெட் டிப் பாளையம், வடகைலாசம், சத்திய வாடி, ஸ்ரீமுஷ்ணம், லால்பேட்டை, தொழுதூர், பரங்கிப்பேட்டை, பெண்ணாடம், ஆவினங்குடி, எறையூர், மஞ்சக்கொல்லை, கீழ்புவனகிரி, ஞானவிநாயகர்சாமி ஆகிய 16 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் பொது சேவை மையம் மூலம் விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு கம்ப்யூட்டர் சிட்டா நகல் பெற்று பயிர்க்கடன் பெறலாம்.மேலும் குறிஞ்சிப்பாடி, புதுச்சத் திரம், ஸ்ரீமுஷ்ணம், லால்பேட்டை, அங்குசெட்டிப்பாளையம், கார்மாங்குடி, தொழுதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள் மூலம் விவ சாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சி, மருந்துகள் விற்பனை செய்யப்படுகிறது. இத்தகவலை மண்டல இணைப் பதிவாளர் வெங்கடேசன் தெரிவித் துள்ளார்.

**திட்டக்குடியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,00:53 IST

திட்டக்குடி : திட்டக்குடியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது.திட்டக்குடி விவசாயிகள் நேரடி நெல் கொள் முதல் நிலையம் திறக்கக் கோரி விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்திடம் நீண்ட காலமாக வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில் 2009-10ம் ஆண் டிற்கான குறுவை சாகுபடிக்கு தமிழக நுகர் பொருள் வாணிபக் கழகம் சார்பில் இளமங்கலம் பெட்ரோல் பங்க் அருகில் நேரடி நெல் கொள் முதல் நிலையம் திறக்கப்பட் டுள்ளது.

இதில் மத்திய சன்னா ரக நெல் குவிண்டாலுக்கு 880 ரூபாய் மற் றும் 220 ரூபாய் போனஸ் சேர்த்து 1,100 ரூபாயாகவும், மோட்டா ரக நெல்லுக்கு 850 ரூபாய் மற்றும் 200 ரூபாய் போனஸ் சேர்த்து 1,050 ரூபாயாகவும் வழங்கப்படுகிறது.

**விவசாயிகளுக்கு அங்கக பண்ணைய பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,00:50 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு அங்கக பண்ணைய பயிற்சி அளிக்கப்பட்டது.

விருத்தாசலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக கரும்பு ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் சார்பில் விவசாயிகளுக்கு அங்கக பண்ணையம் மற்றும் அங்கக உர உற்பத்தி பயிற்சி அளிக்கப்பட்டது.பேராசிரியர் நசீர் அகமது தலைமை தாங்கினார். உதவி இயக்குனர் ஹரிதாஸ் முன்னிலை வகித்தார். உழவியல் பேராசிரியர் மாணிக்கம் அங்கக பண்ணையம் குறித்து பேசினார். பயிற்சியில் கலந்து கொண்ட 100 விவசாயிகளுக்கு இணை பேராசிரியர்கள் துரைசாமி, ஜெயச்சந்திரன் பயிற்சி அளித்தனர். வேளாண்மை அலுவலர் விஜயகுமார் பங்கேற்றனர்.

**உழவர் சந்தையின் செயல்பாடுகள்: வேளாண் அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,00:57 IST

சிதம்பரம் : சிதம்பரம் அருகே ஆயிப்பேட்டை கிராமத்தில் உழவர் சந்தையின் செயல்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

சிதம்பரம் அருகே ஆயிப்பேட்டை கிராமத்தில் வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை சார்பில் பொருட்குழு மற்றும் உழவர் சந்தைக்குரிய கூட்டம் நடத்தப்பட்டது. வேளாண்மை

அலுவலர் சித்ரா விவசாயிகளுக்கு வேளாண் வணிகத் துறையின் பொருட் குழு அமைப்பது பற்றியும், குழு செயல்பாடுகள் மற்றும் துறை சார்ந்த திட்டங்கள், அக்மார்க் தர முத்திரை ஆகியன குறித்தும் விளக்கிக் கூறினார்.பொருட்குழு உறுப்பினர்களுக்கு செம்மை நெல் சாகுபடி பற்றியும் உளுந்து பயிரில் ஒப்பந்த சாகுபடி செய்வது, உழவர் சந்தையின் செயலாளர்கள் நன்மைகள் பற்றியும், புது விவசாயிகளுக்கு அடையாள அட்டை பெற வழிமுறைகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ரமேஷ், ராயர், வேலு செய்திருந்தனர்.

**கரும்பு விவசாயிகள் சங்கம் போராட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,01:06 IST

திருவெண்ணெய்நல்லூர் : பெரியசெவலையில் கரும்பு விவசாயிகள் சங் கம் சார்பில் தொடர் முழக்க போராட்டம் நடந்தது.விழுப்புரம் மாவட் டம் பெரியசெவலை செங்கல் வராயன் கூட்டுறவு சர்க் கரை ஆலை முன்பு நடந்த போராட் டத்திற்கு ஆலை சங்க செயலாளர் சீனுவாசன் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் லோகநாதன், மூர்த்தி, தண்டபாணி முன்னிலை வகித்தனர். ஜோதிராமன் வரவேற் றார். மாநில பொதுச்செயலாளர் ஏழுமலை, மாவட்ட செயலாளர் ராதாகிருஷ்ணன், சங்க தலைவர் ஜெயராமன் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் கரும்பு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்க வேண் டும். வெட்டு கூலியை அரசே வழங்க வேண் டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பலர் பேசினர்.

**ரூ.4 கோடியில் வீடுதோறும் மூலிகை செடி வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,01:07 IST

நாமக்கல்: ""ஒவ்வொரு வீட்டிலும் மூலிகை செடிகளை வளர்க்கும் வகையில், மத்திய அரசு 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. அதற்காக இந்தியாவிலேயே தமிழகத்தில் கொல்லிமலை ஒன்றியம் தேர்வு செய்யப்பட்டுள்ளது," என, மூலிகை சாகுபடி ஒப்பந்த கருத்தரங்கில் மத்திய இணை அமைச்சர் காந்திச்செல்வன் பேசினார்.அன்னை பசுமைபூமி உழவர் கூட்டமைப்பு மற்றும் எம். ஜி.பி., நிறுவனம் சார்பில், நாம க்கல், திருச்சி, பெரம்பலூர் மாவட்ட கோலியஸ் மூலிகை ஒப்பந்த சாகுபடி கருத்தரங்கு நாமக்கல்லில் நடந்தது.கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலை

துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை வகித்து பேசியதாவது:கடந்த 1997ம் ஆண்டு ஐந்து ஏக்கர் பரப்பில், ஐந்து விவசாயிகளுடன் துவங்கிய இந்நிறுவனம், தற்போது 20 மாவட்டங்களில் 10 ஆயிரம் உழவர்களை கொண்டு 25 ஆயிரம் ஏக்கர் மூலிகை சாகுபடி செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளது. 60 ஆயிரம் ஹெக்டேரில் ஒப்பந்த சாகுபடி செய்ய முடிவு செய்யப்பட்டு 35 ஆயிரம் டன் உற்பத்தியை இலக்காக கொண்டு 15 கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும்.

இந்தியாவில் 576 லட்சம் கிராமங்களில் 70 முதல் 75 சதவீதம் பேர் பராம்பரிய மருத்துவ முø றயை பயன்படுத்து வருகின்றனர் என புள்ளி விவரப்பட்டியல் தெரிவிக்கிறது. மூலிகை செடிகளை அன்றாடம் பயன்படுத்துவதன் மூலம் மனிதனில் சராசரி வாழ்நாள் 35 முதல் 40 ஆண்டுகள் என இருந்து தற்போது மருத்துவ வசதி, உடல் ஆரோக்கியம் பேணப்படுவதை அடுத்து 60 வயதாக அதிகரித்துள்ளது என புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.கடந்த 1988 முதல் 2002ம் ஆண்டு வரை ஆண்டுக்கு 5.6 சதவீதம் மருத்துவச் செலவு உயர்ந்து வருகிறது. வனங்களில் இருந்து 1.77 லட்சம் மெட்ரிக் டன் மூலிகை பயிர்கள் சேகரிக்கப்படுகிறது. கொல்லிமலையில் 1,000 அபூர்வ மூலிகை செடிகள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, என்றார்.மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அ மைச்சர் காந்திச்செல்வன், கருத்தரங்கை துவக்கி வைத்தும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் பேசியதாவது:கொல்லிமலையில் மூலிகை பயிர் ஆராய்ச்சி மையம் அமை க்க அனைத்து வகையிலும் உதவி செய்யப்படும். மனித குலம் தோன்றிய போதே மருத்துவ முறையும் தோன்றி உள்ளது. சித்தர்கள் சித்த வைத்திய முறையை நீண்ட காலமாக பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது ஓலைச்சுவடி மூலம் அறியலாம்.எவ்வளவு கஷ்டம் வந்தாலும் விவசாயிகள் நிலத்தை விற்க வேண்டாம்.

வரும் காலங்களில் கோடீஸ்வரர்கள் பட்டியலில் விவசாயிகள் வர வாய்ப்பு உள்ளது என ஒரு புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. நாம் உண்ணும் உணவில், குடிநீரில் நச்சு கலந்துள்ளது. அது மாறவேண்டும். தரமா ன உணவு வகைகளை தயார் செ ய்ய வேண்டும். இயற்கை உண வை உட்கொள்ள வேண்டும்.ஒவ்வொரு வீட்டிலும் மூலிகை செடிகளை வளர்க்கும் விதத்தில் மத்திய அரசு 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. அதற்காக இந்தியாவிலேயே தமிழகத்தில் கொல்லிமலை ஒன்றியம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.இத்திட்டம் அடுத்து மாதம் துவங்குகிறது. இத்திட்டம் படி ப்படியாக அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தப்படும். இந்தியாவில் மருத்துவ பயிர்கள் மூலம் ஆண்டுக்கு 1.69 லட்சம் கோடி ரூபாய் மொத்த வருவாய் விவசாயிகளுக்கு கிடைக்கிறது, என்றார்.முன்னதாக அன்னை பசுமைபூமி உழவர் கூட்டமைப்பு நிறுவன தலைவர் பழனிவேல் வரவேற்றார். மோகனூர் யூனியன் சேர்மன் நவலடி முன்னிலை வகித்தார். தமிழ்நாடு

வேளா ண் பல்கலை மூலிகைத்துறை தலைவர் ராஜாமணி, டில்லி தே சிய மூலிகைக்கழக உறுப்பினர் அன்புகணபதி, டாக்டர் மாயவ ன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**பயிர் பாதுகாப்பு கருவி வாங்க அரசு மானியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,02:19 IST

ராசிபுரம்: "ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பயிர் பாதுகாப்பு கருவிகள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது' என, கொல்லிமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சையத் அன்சர் பாஷா தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:கொல்லிமலையில் உள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், விவசாயப் பொருள்களின் உற்பத்தியை பெருக்கி அதிக வருவாய் ஈட்டவும் நடப்பு ஆண்டு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பலா ஒட்டுச்செடி, சில்வர் ஓக், காப்பி உள்ளிட்டவைகளுக்கு 75 சதவீதமும், பயிர் பாதுகாப்பு கருவிகள் பெற 75 சதவீதமும், காய்கறி, நாற்றுகள் மற்றும் நுண்ணீர்ப்பாசன கருவிகள் வாங்க 90 சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது.இத்திட்டத்தில் பயனாளிகளாக மலைவாழ் விவசாயிகள் தேர்வு செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் செம்மேடு வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனரை நேரில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தோட்டக்கலை பண்ணையில் நாற்றுகள் விற்பனைக்கு இருப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,02:17 IST

நாமக்கல்: "கொல்லிமலை அரசு தோட்டக்கலை பண்ணையில் சில்வர் ஓக், காபி, மா, எலுமிச்சை உள்ளிட்ட நாற்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளது. தேவைப்படும் விவசாயிகள் வாங்கி பயன்பெறலாம்' என, தோட்டக்கலை துணை இயக்குனர் தனகோபாலன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் கொல்லிமலையில் அமைந்துள்ள படசோலை மற்றும் செம்மேடு அரசு தோட்டக்கலை பண்ணைகளில் பல்வேறு நாற்றுகள் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. படசோலையில் 4 ரூபாய் விலையில் சில்வர் ஓக் நாற்று 60 ஆயிரத்து 565, 5 ரூபாய் விலையில் காபி நாற்று 27 ஆயிரத்து 865, எலுமிச்சை நாற்று 2,500, 6 ரூபாய் விலையில் கிராம்பு நாற்று 500, 30 ரூபாய் விலையில் மா (ஒட்டு) நாற்று 300, 12 ரூபாய் விலையில் கொய்யா

நாற்று 37ம் உள்ளன.செம்மேடு பண்ணையில் சில்வர் ஓக் நாற்று 10 ஆயிரத்து 904, காபி நாற்று 7,459, எலுமிச்சை நாற்று 318, அழகு செடிகள் 4,038, பலா ஒட்டு 15 நாற்றுகள் இருப்பு உள்ளது.தற்போது மாவட்டத்தில் நடவுக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை உள்ளதால், விவசாயிகள் தோட்டக்கலை பண்ணைகளை அணுகி நாற்றுகள் வாங்கி பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஆடுவளர்ப்போர் பயன்பெற நலவாரியத்தில் பதிவு அவசியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,00:43 IST

பேரூர் : ""ஆடுவளர்ப்போர் நலவாரியத்தில் பயன்பெற தகுதியுடை பயனாளிகள், பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்," என, கால்நடைபராமரிப்புத் துறை, மண்டல இணைஇயக்குனர் தெரிவித்துள்ளார்.ஆடுவளர்ப்போர் நலவாரியம் மூலம் பயனாளிகளை அறிந்து, சமுதாய பொருளாதார முன்னேற் றத்துக்கு வழிவகை செய்ய ஆடுவளர்ப்போர் நலவாரியத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. சமீபத்தில், அமைச்சர் பழனிசாமி தலைமையில், ஆடுவளர்ப்போர் நலவாரியத்தின், உயர்மட்ட அலுவலர்கள் கூட்டம் நடந்தது.
கூட்டத்தில், குறைந்தபட்சம் ஐந்து செம்மறி அல்லது வெள்ளாடுகளை வளர்ப்போர்களை அடையாளம் கண்டு அவர்களது பெயர்களை பதிவு செய்து, வேறு துறைகளில் பயன்பெறாத பயனாளிகளைக் கண்டறிந்து, வாரியத்திலுள்ள அரசு திட்டங்களின் மூலம் சலுகைகள் வழங்க முடிவானது. இதுகுறித்து, கால்நடைபராமரிப்புத்துறை மண் டல இணைஇயக்குனர் தியாகுவிஜயன் கூறியதாவது: பதிவு செய்யும் எண்ணிக்கையின் அடிப்படையில், ஆடுகள் வளர்க்க கடனுதவி அளித்தல், காப்பீடு செய்தல், மருத்துவசிகிச்சை அளித்தல் போன்ற சலுகைகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. எனவே, இச்சலுகைகளைப் பெற, குறைந்த பட்சம் ஐந்து ஆடுகள் வைத்திருக்கும் அனைவரும், அருகாமையிலுள்ள கிராம கால்நடை மருந்தகத்தில், உள்ளூர் வி.ஏ.ஓ., விடம் தகுதிச்சான்றிதழ் பெற்று, பெயர்களை பதிவுசெய்து கொள்ள வேண்டும். பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வரும், 2010-11,12,13 ஆகிய மூன்று நிதியாண்டுகளில் அரசு சலுகைகள் நØமுறைப்படுத்தப்படும். இவ்வாறு, மண்டல இணைஇயக்குநர் தெரிவித்தார்.

**மானிய விலையில் சம்பா நெல் வழங்கல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,22:48 IST

தாராபுரம் : தாராபுரம் வேளாண் விரிவாக்க மையத்தில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தில் மானிய விலையில் சம்பா நெல் ரகங்கள் கிடைக்கும்.
வேளாண் விரிவாக்கம் மற்றும் பயிற்சி மைய உதவி அலுவலர் (பொறுப்பு) ஞானசேகரன் வெளியிட்டுள்ள அறிக்கை: அமராவதி பழைய, புதிய ஆயக்கட்டு பாசன பகுதி விவசாயிகளின் நலன் கருதி, தாராபுரம் வட்டாரத்தில் தாராபுரம் மற்றும் கோவிந்தாபுரம் வேளாண் விரிவாக்க மையத்தில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சம்பா பருவத்துக்கு ஏற்ற ஏடிடி-39 சான்று பெற்ற விதைகள் 20 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.
விவசாயிகளின் நலன் கருதி தமிழக அரசு கிலோவுக்கு ஐந்து ரூபாய் மானியம் வழங்குகிறது. நெற்பயிருக்கு தேவையான நுண்ணூட்டம் மற்றும் நுண்ணுயிர் பொட்டலங்கள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் விவசாயிகள், வேளாண் விரிவாக்க மையத்தில் பெற்றுக்கொள்ளலாம், என்று கூறியுள்ளார்.

**வெங்காயத்துக்கு உரமாகும் கழிவு பஞ்சு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,22:46 IST

திருப்பூர் : வெங்காயம் பயிரிடப்படும் நிலத்தில், கழிவு பஞ்சை அடியுரமாக பயன்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
மகசூல் அதிகரிக்க அடியுரம் அவசியமானது. இதற்கு சாணம், கோழி எரு உள்ளிட்ட இயற்கை உரம் மற்றும் பல்வேறு செயற்கை உரத்தை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.
கோவில்வழி, பொல்லிகாளிபாளையம் சுற்றுப்பகுதியில் கழிவு பஞ்சை அடியுரமாக அளிக்கின்றனர். வரும் டிசம்பர் மாத வெங்காய நடவுக்காக கழிவு பஞ்சு போடப்பட்டு, உழவு செய்யப்பட்டுள்ளது.
விவசாயிகள் கூறுகையில், "இயற்கை விவசாயத்துக்கு ஏற்றதாக கழிவு பஞ்சு உள்ளது. மில்களில் கிடைக்கும் கழிவு பஞ்சை கிலோ 1.50 ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை வாங்கப்படுகிறது. ஏக்கருக்கு நான்கு முதல் ஐந்து டன் வரை அளிக்க வேண்டும். குறைந்தது இரண்டு மாதங்களில் கழிவு பஞ்சு சிறந்த அடியுரமாக மாறி விடுகிறது. சாண எருவுக்கு இணையாக, கோழி எருவை விட சிறந்ததாக உள்ளது.

"வரும் டிசம்பர் மாதம் வெங்காயம் நடவு செய்யப்பட உள்ளது. அதற்காக, நிலத்தில் அடியுரமாக கழிவு பஞ்சு போடப்படுகிறது. வரும் நாட்களில் கிடைக்கும் மழைப்பொழிவு மூலம் பஞ்சு நன்றாக மக்குகிறது. மண்ணுக்கும் நல்ல பொலிவு கிடைக்கிறது. மொத்தமாக கொள்முதல் செய்யும்போது 6000 ரூபாய் வரை கிடைக்கிறது. சராசரியான விலை உள்ளதால் கட்டுப்படியாகிறது,' என்றனர்.

**பயிர் பாதுகாப்பு திட்ட காப்பீட்டில் சேர விவசாயிகளுக்கு அதிகாரி அழைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,00:15 IST

கரூர்: "தேசிய வேளாண்மை பயிர் பாதுகாப்பு திட்டத்தில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய வேண்டும்' என, கரூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயந்தி அறிவித்துள்ளார்.அறிக்கையில் உள்ளதாவது: பெரும்பான்மை மக்களின் முக்கிய தொழிலாகவும், வாழ்க்கை ஆதாரமாகவும் வேளாண்மை விளங்குகிறது. இயற்கை சீற்றம் மற்றும் பூச்சி, நோய்த்தாக்குதல் போன்ற காரணங்களால் விவசாயிகள் அச்சம் அடைந்துள்ளனர். அச்சத்தை போக்கும் வகையில் வேளாண்மைத்துறை, தேசிய வேளாண்மை பயிர் பாதுகாப்பு திட்டத்தில் பயிர்களுக்கான காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கரூர் வட்டாரத்தில் நெல் சம்பா பருவம் மற்றும் வாழை பயிருக்கு நடப்பாண்டு காப்பீடு திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. திட்டத்தின் மூலம் இயற்கை சீற்றம், பூச்சி நோய் தாக்குதல் போன்ற காரணங்களால் ஏற்படும் பண இழப்பை அரசு காப்பீடு பணமாக அளிக்கிறது. விதைத்த அல்லது நடவு செய்த ஒரு மாதத்துக்குள் அல்லது டிசம்பர் 15ம் தேதிக்கு முன்பு காப்பீடு விண்ணப்பம் அளித்தல் வேண்டும்.சம்பா நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கான காப்பீடு தொகை 13 ஆயிரத்து 24 ரூபாய், இதற்காக பிரீமியத்தொகை 260 ரூபாய். 50 சதவீதம் மானியம் பெரு விவசாயிக்கும், 55 சதவீதம் மானியம் சிறு, குறு விவசாயிக்கும் வழங்கப்படுகிறது. எனவே, ஏக்கருக்கு பெரு விவசாயிகள் பிரீயமித்தொகை 130 ரூபாய், சிறு, குறு விவசாயிகள் 117 ரூபாய் செலுத்த வேண்டும்.கரூர் வட்டார விவசாயிகள், வெண்ணெய்மலை மற்றும் வேலாயுதம்பாளையம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பயிர் காப்பீடு செய்யலாம்.

**நெல் கொள்முதல் நிலையம், கிடங்கு மோசம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,00:49 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக ஏ.ஐ.டி.யு.சி., தொழிற்சங்க மாநில நிர்வாகக்குழு கூட்டம் மாநில துணைத்தலைவர் சிவானந்தம் தலைமையில் நடந்தது.மாநில பொதுச் செயலாளர் சந்திரகுமார், பொருளாளர் கோவிந்தராஜன், துணைத்தலைவர் சந்தானம், சென்னை செல்வராசு, திருவாரூர் வேதநாராயணன், தஞ்சை சூரியமூர்த்தி, திருத்துறைப்பூண்டி சுப்பிரமணியன் உட்பட பலர் பேசினர். சுமை தூக்கும் தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் பெருமாள் 83வது பிறந்த நாளை முன்னிட்டு கவுரவிக்கப்பட்டார்.பனி, மழை காலங்களில் 17 சதவீத ஈரப்பதம் வரை கொள்முதல் செய்ய வாய்ப்பில்லை. ஆனால், நெல் கொள்முதலில் 17 சதவீத ஈரப்பதம் உள் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று நடைமுறைக்கு பொருந்தாத வகையில் கொள்முதல் செய்யப்படுகிறது. இது விவசாயிகளுக்கு மிகுந்த சிரமத்தையும், பணியாளர்களுக்கு சங்கடத்தையும் உருவாக்குகிறது.

தனியார் வியாபாரிகள் இதை வாய்ப்பாக பயன்படுத்தி கொள்ளை லாபம் பெறுவதும், விவசாயிகள் வஞ்சிக்கப்படுவதும் தொடர்கிறது. அவ்வப்போது முடிவு செய்யும் முறையை கைவிட்டு ஆண்டு தோறும் செப்டம்பர் முதல் ஜனவரி வரை 20 சதவீதம் வரை நெல் கொள்முதல் செய்ய நிரந்தரமான ஆணையை பிறப்பித்து அமல்படுத்த தமிழக அரசை வலியுறுத்த வேண்டும்.சுமை தூக்கும் தொழிலாளருக்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கூலி உயர்வு போதுமானதல்ல. கொள்முதல் நிலையங்களில் ஒரு மூடை எடை வைத்து தைத்து லாரியில் ஏற்றுவதற்கு 1.87 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால், இதே வேலைக்கு தனியார் ஏழு ரூபாய் வழங்குகின்றனர். எனவே, தனியாருக்கு இணையாக கூலி வழங்க வேண்டும்."ஓய்வு பெற்ற நுகர்பொருள் வாணிபக்கழக பணியாளருக்கு ஓய்வூதியம் இல்லை' என்ற நிலையை மாற்றி, மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை கருணைத்தொகைøயாக வழங்க வேண்டும்.

தூத்துக்குடி உதவி தர ஆய்வாளர் முருகன் மரணம் தொடர்பாக நீதி விசாரணை நடத்த வேண்டும். குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்று மோசமான சூழ்நிலை மாநிலம் முழுவதும் உள்ள கிடங்குகளில் உள்ளதை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை வலியுறுத்தி செப்டம்பர் 28ம் தேதி தஞ்சையில் ஆர்ப்பாட்டம் நடத்துவது.தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நுகர்பொருள் வாணிபக்கழக பணியாளர்களுக்கு 25 சதவீத போனஸ் வழங்க வேண்டும். சுமை தூக்கும் தொழிலாளருக்கு 2,500 ரூபாய் போனஸ் வழங்க வேண்டும், என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மதுரையில் நெல்லுக்கு பதில் பணப்பயிர் விவசாயத்தில் ஆர்வம் : வெங்காயம்,வெண்டை,கத்தரி விளைச்சல் அமோகம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2010,02:45 IST

சத்திரப்பட்டி : மதுரையில் பணப்பயிர் விவசாயத்தில் விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். ஓய்வு பெற்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர், தனது கொய்யாத்தோப்பில் வெங்காயம், வெண்டைக்காய், கத்தரியை ஊடுபயிராக விளைவித்து, விவசாயத்தில் புதிய யுக்தியை கையாண்டு வருகிறார்.

மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஊமச்சிகுளம், காஞ்சரம்பேட்டை, சத்திரப்பட்டி, பரவை உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் நெல் சாகுபடியை வழக்கமாக கொண்டுள்ளனர். உசிலம்பட்டி, செல்லம்பட்டி, பேரையூர், எழுமலை உள்ளிட்ட பகுதிகளில் நெல் மற்றும் வெண்டைக்காய், கத்திரி ஆகியவை விளைவிக்கப்படுகிறது. பருவமழை பொய்த்து வருவதால் நெல் சாகுபடியை நம்ப இயலாத சூழல் ஏற்படுகிறது.

சிறிய அளவில் கிடைக்கும் தண்ணீரை பயன்படுத்தி, பணப்பயிர் விவசாயத்தில் விவசாயிகளின் கவனம் திரும்பியுள்ளது. சத்திரப் பட்டி அருகே சின்னப்பட்டியை சேர்ந்த ஓய்வு பெற்ற போலீஸ் இன்ஸ் பெக்டர் எஸ். வெள்ளைச் சாமி (63), தனது கொய்யாத் தோப்பில் ஊடுபயிராக வெங்காயம், வெண்டைக்காய், கத்திரியை விளைவித்து விவசாயத்தில் புதிய யுக்தியை கையாண்டு வருகிறார். மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பணப்பயிர் விவசாயம் சின்னப்பட்டியில் மட்டுமே நடப்பது குறிப்பிடத்தக்கது.

ஆறு மாத பலன்: பணப்பயிர் விவசாயம் குறித்து வெள்ளைச்சாமி கூறியதாவது: கொய்யாத்தோப்பில் ஊடுபயிராக வெங்காயம், வெண்டைக்காய், கத்திரி, துவரை, உளுந்து, முருங்கை ஆகியவற்றை தலா 20 சென்ட் நிலத்தில் பயிரிட்டுள்ளேன். முதல்முறையாக கடந்தாண்டு பணப்பயிர் விவசாயத்தை துவக்கினேன். நல்ல லாபம் கிடைத்தது. தற்போது இரண்டாவது ஆண்டாக பணப்பயிர் சாகுபடிக்காக கடந்த ஜூனில் விதைகளை தூவி பணியை துவக்கியுள்ளேன். குறைந்த தண்ணீரில் பயிர்கள் விளைவிக்கப்படுகிறது. ஆறு மாதத்தில் பலனளிக்கும். இயற்கை உரம் வைக்கிறேன். பூச்சி மருந்து தெளிப்பதால், பூச்சி வெட்டில் இருந்து பயிர்கள் காக்கப்படுகிறது, என்றார். விவசாயத்தில் புதுமையை புகுத்தி வரும் வெள்ளைச்சாமியை பின்பற்றி மற்ற பகுதிகளிலும் பணப்பயிர் விவசாயத்தில் விவசாயிகள் ஆர்வம் காட்டினால் வேளாண் தொழில் செழிக்கும்.

**மானிய விலையில் விவசாய கருவிகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2010,23:31 IST

விருதுநகர் : சிறு, குறு விவசாயிகளுக்கு விவசாய பணிகளுக்காக ஒரு மணி நேரத்துக்கு புல்டோசர்கள் 720 ரூபாய்க்கும், உழவு டிராக்டர்கள் 285க்கும், அறுவடை இயந்திரம் 805க்கும் வாடகைக்கு கிடைக்கும். வேளாண் தொடக்க கூட்டுறவு வங்கிகள், அக்ரிக்கல்ச்சரல் கிளினிக் நடத்துபவர்கள் விவசாய இயந்திரங்களை 50 சத மானியத்தில் வாங்க 8 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. களை, உழவுகருவிகள், சுழல் கலப்பைகள், ஊடுபயிர் உழவு கருவிகள், பவர் ஸ்பிரேயர்கள், இருபாலரும் பயன்படுத்தும் நெல் விதைப்பு, தென்னை மரம் ஏறும் கருவி, கோனோ வீடர், மற்றும் தெளிப்பான்கள் ஆகியவை 50 சத மானியத்தில் வழங்கப்படுகிறது என கலெக்டர் வி.கே. சண்முகம் தெரிவித்துள்ளார்.

**வாழைக்காய் பதப்படுத்தும் மைய அடிக்கல் நாட்டு விழா**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,00:55 IST

ஸ்ரீவைகுண்டம் : ஸ்ரீவைகுண்டத்தில் 2 கோடி ரூபாய் செலவில் வாழைக்காய் பதப்படுத்தும், பழுக்க வைக்கும் மையத்தின் அடிக்கல் நாட்டு விழா நடந்தது.தமிழகத்தில் திருச்சி, மோகினூர், சின்னமனு ஆகிய இடங்களில் உள்ளது போல ஸ்ரீவைகுண்டம் புதுக்குடியில் அமைக்கப்பட உள்ள நிலையத்தின் அடிக்கல் நாட்டு விழாவிற்கு திருநெல்வேலி, தூத்துக்குடி விற்பனை குழு தலைவர் கணேசன் தலைமை வகித்தார்.

செயலாளர் கஜேந்திரபாண்டியன், சிவந்திபட்டி சண்முகவேல், மணக்காடு மாடசாமி மற்றும் விற்பனை கூட கண்காணிப்பாளர் ராமசந்திரன், இன்ஜி., ரமேஷ், உதவியாளர் சையது ஆகியோர் கலந்து கொண்டனர். சிற ப்பு பூஜைகள் செய்து பூமிபூஜை செய்தனர். குடோனில் வாழைக்காய்களை 3 மாத காலம் வரை பதப்படுத்தவும், விஞ்ஞான முறைப்படி பழங்களை பழுக்க வைக்கவும் புதிய மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் ஸ்ரீவை., பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## சமையல் எண்ணெய் இறக்குமதி 10.65 லட்சம் டன்னாக உயர்வு பண்டிகை காலத்தில் விலை குறைய வாய்ப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 64 சதவீதம் அதிகரித்து 10.65 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. செப்டம்பர் மாதத்திலும் 7 லட்சம் டன் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து, எதிர்வரும் பண்டிகை காலத்தில் சமையல் எண்ணெய் விலை குறைய வாய்ப்புள்ளது

### உற்பத்தி

இந்தியாவில் ஆண்டுக்கு 80 லட்சம் டன் சமையல் எண்ணெய் உற்பத்தி ஆகிறது. அதேசமயம், சமையல் எண்ணெய் பயன்பாடு இதைக்காட்டிலும் இரண்டு மடங்கு அதிகரித்து 1.60 கோடி டன்னாக உள்ளது. நம் நாடு அதன் சமையல் எண்ணெய் தேவைப்பாட்டில் 50 சதவீதத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. எனவே, சர்வதேச அளவில் இதன் விலை உயரும்போது அது இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

நடப்பு 2009-10-ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தின் (அக்டோபர் - செப்டம்பர்) முதல் 10 மாதங்களில் நாட்டின் தாவர எண்ணெய் (சமையல் எண்ணெய் + இதர

பயன்பாட்டு எண்ணெய்) இறக்குதி 5 சதவீதம் அதிகரித்து 70,70,491 டன்னிலிருந்து 74,47,955 டன்னாக உயர்ந்துள்ளது.

கையிருப்பு

இந்நிலையில், சமையல் எண்ணெய் கையிருப்பும் நன்றாக உள்ளது. எனவே, சமையல் எண்ணெய் போதுமான அளவில் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு செப்டம்பர் மாதம் 1–ந் தேதி நிலவரப்படி, இறக்குமதி செய்ய ஒப்பந்தம் ஆகியுள்ள மற்றும் துறைமுகங்களை வந்தடைந்துள்ள சமையல் எண்ணெயின் அளவு 13.80 லட்சம் டன்னாக உள்ளது. மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் சோயா மற்றும் சூரியகாந்தி எண்ணெய் உள்ளிட்ட முக்கிய சமையல் எண்ணெய் விலை ரூ.2–5 குறைந்துள்ளது.